Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்
Madurai Mani Tamil Evening Daily
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 152 உள்ளூர் - 01.06.2026 திங்கள் விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 152 வெளியூர் - 02.06.2026 செவ்வாய் Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

குரு ஆசீர்வாதம்! செழிக்கும் ராசிக்காரர்கள்!

டிஎன்பிஎஸ்சி ஆட்சேர்ப்பு – 461 பணியிடங்கள்!

அண்ணாமலை போடும் புது கணக்கு..!

8-வது ஊதியக்குழு: ஓய்வூதியதாரர்களுக்கு ஜாக்பாட்!!

## முதல்-அமைச்சர் விஜய் திருச்சி வருகை!

சென்னை, ஜூன். 01–

த.வெ.க. தலைமை நிலையச் செயலகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:–

தமிழக வெற்றிக் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்–அமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளும், திருச்சிராப்பள்ளி மாவட்ட மக்கள் சந்திப்பு மற்றும் திருச்சி கிழக்கு தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி, (01.06.2026) திங்கள்கிழமை, திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரி வளாகத்தில் மாலை 4.15 மணி முதல் நடைபெற உள்ளது. காவல் துறை அனுமதிக்கான வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்த நிகழ்ச்சியானது முழுக்க முழுக்க, அனுமதி பெற்றவர்களுக்கான நிகழ்ச்சியாக மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**பாதுகாப்பு**

QR குறியீட்டுடன் கூடிய நுழைவுச் சீட்டு அளிக்கப்பட்டுள்ள 5,000 பேர் மட்டுமே இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள். வேறு யாருக்கும் கண்டிப்பாக அனுமதி கிடையாது. QR குறியீடு அனுமதிச் சீட்டானது, தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, பாதுகாப்புக் கருதி, கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர் – சிறுமியர், பள்ளி மாணவ – மாணவியர், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், உடல்நலம் குன்றியவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்கான QR குறியீடு அனுமதிச் சீட்டு வழங்கப்படவில்லை. எனவே இவர்கள் யாரும் கண்டிப்பாக வர வேண்டாம்.

**குடிநீர், மருத்துவ வசதி**

காவல்துறையின் வழிகாட்டுதலின்படி, பங்கேற்பாளர்கள் தங்களது வாகனங்களை நிறுத்தும் போது, அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே, போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாதவாறு நிறுத்த வேண்டும்.

QR குறியீடு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டு, நிகழ்ச்சியில் கலந்துகொள்ள உள்ளவர்களுக்குத் தேவையான குடிநீர், மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அனுமதிச் சீட்டு இல்லாத கழகத் தோழர்களும் பொதுமக்களும் கண்டிப்பாக அனுமதிக்கப்பட மாட்டார்கள். எனவே அவர்கள் இந்த நிகழ்ச்சியைத் தொலைக்காட்சி, சமூக வலைத்தள நேரலைகளில் கண்டு, QR குறியீடு அனுமதிச் சீட்டு பெற்றிருப்பவர்கள் மட்டுமே பங்கேற்க முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜேஇஇ அட்வான்ஸ்டு தேர்வு முடிவுகள் வெளியீடு!

புதுடெல்லி, ஜூன். 01–

இந்தியாவின் மதிப்பு மிக்க கல்வி நிறுவனங்களான ஐஐடிகள், என்ஐடி உள்ளிட்ட மத்திய தொழில்கல்வி நிறுவனங்களில் பிஇ, பிடெக் போன்ற படிப்பில் சேருவதற்காக ஜாயின்ட் என்ட்ரன்ஸ் எக்சாம் (ஜேஇஇ) நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வு ஜேஇஇ மெயின் மற்றும் ஜேஇஇ அட்வான்ஸ் என இரண்டு கட்டமாக நடத்தப்படுகிறது.

ஜேஇஇ மெயின் தேர்வில் தேர்ச்சி பெறுபவர்களுள் முதல் 1,50,000 இடங்களில் வரும் மாணவர்கள் மட்டுமே ஜேஇஇ அட்வான்ஸ் தேர்வு எழுதுவார்கள்.

நடப்பாண்டுக்கான ஜேஇஇ அட்வான்ஸ் தேர்வு கடந்த மே 17 அன்று CBT முறையில் நாடு முழுவதும் நடத்தப்பட்டது. இந்தாண்டு சுமார் 1.79 லட்சம் மாணவர்கள் தேர்வெழுதினர்.

இந்நிலையில் இந்த தேர்வின் முடிவுகள் இன்று (ஜூன் 1) அறிவித்தபடி வெளியாகி உள்ளது.

www.jeeadv.ac.in என்ற அதிகாரபூர்வ இணையதளத்தில் முகப்புப் பக்கத்தில் உள்ள 'JEE Advanced 2026 result' என்ற லிங்க்கை கிளிக் செய்து தங்கள் மதிப்பெண் விவரங்களை மாணவர்கள் அறிந்து கொள்ளலாம். தற்போது வெளியாகியுள்ள முடிவுகளின்படி தேர்வெழுதிய 1.79 லட்சம் மாணவர்களில் 56,880 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.



முதல் 3 இடங்களை டெல்லி மண்டல மாணவர்கள் பிடித்துள்ளனர். சுபம் குமார் என்ற மாணவர் 360 மதிப்பெண்களுக்கு 330 மதிப்பெண்கள் பெற்று அகில இந்திய அளவில் முதலிடம் பிடித்துள்ளார்.

கபீர் சில்லார் என்ற மாணவர் 329 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளார். ஜதின் சாஹர், 319 மதிப்பெண்கள் பெற்று மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

## பொறியியல் கலந்தாய்வு: விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு!

சென்னை, ஜூன். 01–

தமிழகத்தில் பொறியியல் படிப்புக்கான கலந்தாய்வுக்கு விண்ணப்பிக்க ஜூன் 5 வரை கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு ள்ளது. தமிழகத்தில் உள்ள அரசு, தனியார் பொறியியல் பல்கலை. கல்லூரிகளில் பி.இ., பி.டெக். இளநிலை பொறியியல் படிப்புகளின் அரசு ஒதுக்கீடு இடங்களில் சேருவதற்கான கலந்தாய்வு க்கு விண்ணப்பப் பதிவு இணையம் வழியாக நடைபெற்று வருகிறது. கடந்த மே 3– ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த விண்ணப்பப் பதிவுகளில் இணைய வழி மூலம் இதுவரை 2.81 லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர். பொறியியல் படிப்புகளில் சேர்வதற்கான கலந்தாய்வுக்கு விண்ணப்பிக்க (ஜூன் 2) கடைசி நாள் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.



இதையடுத்து பொறியியல் படிப்புக்கு விண்ணப்பிக்க கால அவகாசம் ஜூன் 5 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாணவர்களின் சந்தேகங்களை தெளிவுபடுத்திக்கொள்ள மாநிலம் முழுவதும் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர் பிரிவின் கீழ் விண்ண ப்பித்துள்ள மாணவர்களுக்கான சான்றிதழ் சரிபார்ப்பின் முதல் கட்டம், (ஜூன் 1) முதல் ஜூன் 9 வரை சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளா கத்தின் விவேகானந்தா அரங்கத்தில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## பயிர்க்கடன்; விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

சென்னை, ஜூன். 01–

தமிழ்நாட்டில் சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக கடந்த 25–ம் தேதி தமிழக அரசு அறிவிப்பை வெளியிட்டது.

கூட்டுறவு வங்கிகளில் இருந்து ரூ.50,000 வரை பயிர்க்கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு முழுமையாக பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தது.தமிழக அரசின் இந்த அறிவிப்பு விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது. தேர்தல் வாக்குறுதியில் கூறியபடி 5 ஏக்கருக்கு குறைவாக உள்ள விவசாயிகளின் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகிறார்கள்.

விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

இந்த கோரிக்கையை வலியுறுத்தி தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. வேலூர் சத்துவாச்சாரியில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே விவசாயிகள் ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டனர். நெற்றியில் பட்டை நாமம் போட்டு, வாயில் கருப்பு துணி கட்டி ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் ஈடுபட்டனர். அதேபோல, சேலம் கோட்டை மைதானத்திலும் ஆர்ப்பட்டம் நடைபெற்றது. விவசாயிகளின் ஆர்ப்பாட்டம் காரணமாக சம்பந்தப்பட்ட இடங்களில் போலீஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டு இருந்தது.



**கடன் தள்ளுபடி எவ்வளவு செய்யப்பட்டது?**

கடன் தொகை ரூ.50,000 வரை இருந்தால் குறு விவசாயிகளுக்கு முழு தள்ளுபடி செய்யப்படும்.

ரூ.50,001 முதல் ரூ.60,000 வரை கடன் இருந்தால் ரூ.40,000 தள்ளுபடி செய்யப்படும்.

ரூ.60,001 முதல் ரூ.70,000 வரை இருந்தால் ரூ.30,000 வரை தள்ளுபடி செய்யப்படும்.

ரூ.70,001 முதல் ரூ.80,000 வரை கடன் பெற்று இருந்தால் ரூ.20,000 வரை தள்ளுபடி செய்யப்படும்.

ரூ.80,001 முதல் ரூ.90,000 வரை கடன் பெற்று இருந்தால் ரூ.10,000 வரை தள்ளுபடி செய்யப்படும்.

ரூ.90,001 முதல் ரூ.1 லட்சம் வரை கடன் பெற்று இருந்தால் ரூ.5,000 தள்ளுபடி செய்யப்படும்.

## ஐஎஸ்ஐ தீவிரவாதிகளின் புது சதி..

# இந்திய அரசியலுக்குள் ஊடுருவ திட்டம்...!

## அதிர வைக்கும் பயங்கர பிளான்!!

ஸ்ரீநகர், ஜூன். 01–

இந்தியாவின் இறையாண்மையையும் அமைதியையும் சீர்குலைக்க பாகிஸ்தான் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ தொடர்ந்து பல்வேறு சதித்திட்டங்களைத் தீட்டி வருகிறது. தற்போது பயங்கரவாதச் செயல்களை மறைக்க "அரசியல்" என்ற புதிய முகமூடியைப் பயன்படுத்தும் தந்திரத்தை ஐஎஸ்ஐ கையில் எடுத்துள்ளது. ஜம்மு காஷ்மீரில் உள்ள மற்றும் தேசிய அளவில் உள்ள சில முக்கிய தேசிய அரசியல் கட்சிகளுக்குள் பயங்கரவாத ஆதரவாளர்களை ஊடுருவச் செய்ய ஐஎஸ்ஐ புதிய உத்தரவு பிறப்பித்துள்ளது அண்மையில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது




**சதித்திட்டத்தின் விவரம் ;**

பாரம்பரியமாக பயங்கரவாதிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தி வந்த நிலையில், தற்போது ஐஎஸ்ஐ ஒரு புதிய உத்தியை கையாண்டுள்ளது. ஜம்மு காஷ்மீரில் செயல்படும் 'ஓவர் கிரவுண்ட் வொர்க்கர்ஸ்' (OGW) எனப்படும் பயங்கரவாத ஆதரவாளர்களை, இந்தியாவின் முன்னணி தேசிய அரசியல் கட்சிகளில் சாதாரண உறுப்பினர்களாகச் சேர்த்து, அவர்களுக்கு உறுப்பினர் அட்டைகளை வழங்க திட்டமிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் பின்னணியில் பல்வேறு காரணங்கள் உள்ளன. முதலாவதாக, அரசியல் கட்சி உறுப்பினராக இருந்தால் பாதுகாப்புப் படையினரின் சந்தேகப் பார்வையில் இருந்து தப்பிக்க முடியும்.

இரண்டாவதாக, அரசியல் முகமூடியைப் பயன்படுத்தி ரகசியமாக பயங்கரவாதிகளுக்கு ஆட்களைச் சேர்ப்பது, பணம் திரட்டுவது மற்றும் பாகிஸ்தானில் இருந்து வரும் ஆயுதங்களை பாதுகாப்பாகக் கடத்துவது ஆகியவை எளிதாகும். மக்களாட்சியின் போர்வையில் நாசவேலைகளைச் செய்ய இது ஒரு சிறந்த வழியாக ஐஎஸ்ஐ கருதுகிறது.

**அம்பலமான ரகசியம்;**

ஜம்மு காஷ்மீர் காவல்துறை நடத்திய சோதனையில் பல OGWகள் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் இந்த பெரிய சதி வெளியானது. கைதானவர்களின் பாக்கெட்டுகளில் முக்கிய தேசிய அரசியல் கட்சிகளின் அடிப்படை உறுப்பினர் அட்டைகள் இருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

முன்னாள் ஜம்மு காஷ்மீர் காவல்துறை தலைவர் எஸ்.பி. வைத் இது குறித்து கூறுகையில், "அரசியல் கட்சி உறுப்பினர் அட்டை என்பது சோதனைச் சாவடிகளில் இருந்து தப்பிப்பதற்கான கேடயமாகப் பயன்படுத்தப்படுகிறது. கடந்த காலங்களில் இத்தகைய அட்டைகளைக் காட்டி ஆயுதங்களைக் கடத்திய சம்பவங்கள் பல நடந்துள்ளன" என்றார்.

**வரலாற்று உதாரணங்கள்;**

இந்தத் தந்திரம் புதிதல்ல. 1990களின் இறுதியிலும் 2000களின் தொடக்கத்திலும் இதேபோன்ற உத்திகள் பயன்படுத்தப்பட்டன. 2020 ஜூலையில் ரியாசி பகுதியில் லஷ்கர் – இ – தொய்பா பயங்கரவாதி தாலிப் ஹுசைன் கைது செய்யப்பட்டான். அவன் ஒரு முக்கிய அரசியல் கட்சியின் சிறுபான்மையினர் பிரிவின் சமூக ஊடகப்பொறுப்பாளராக இருந்தது வெளியானது. அவனிடம் இருந்து AK ரக துப்பாக்கிகள் மற்றும் கையெறி குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

அண்மையில் பஞ்சாப் மலேர்கோட்லாவில் 15 ஆண்டுகளாக ரகசியமாக இயங்கி வந்த லஷ்கர் நெட்வொர்க் முறியடிக்கப்பட்டது. இத்தகைய சம்பவங்கள் பயங்கரவாதிகள் தொடர்ந்து அரசியல் முகமூடியைப் பயன்படுத்தி வருவதை உறுதிப்படுத்துகின்றன. தற்போதைய நிலை இந்திய பாதுகாப்புப் படையினரின் தொடர் அதிரடி நடவடிக்கைகளால் ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாத அமைப்புகள் பலவீனமடைந்துள்ளன. தலைவர்கள் இழப்பு மற்றும் OGW வலைப்பின்னல் உடைப்பு ஆகியவை அவர்களை பாதித்துள்ளன. இந்த இடைவெளியை நிரப்ப ஐஎஸ்ஐ அரசியல் ஊடுருவலைத் தீவிரப்படுத்தியுள்ளது. எனினும், இந்திய மத்தியப் புலனாய்வு அமைப்புகளும் பாதுகாப்புப் படையினரும் மிகுந்த விழிப்புடன் செயல்பட்டு வருகின்றனர். மறைமுக செல்களை கண்டறிந்து, பணப் புழக்கம் மற்றும் ஆயுதப் போக்குவரத்தைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காஷ்மீரில் நிலவும் அமைதியைப் பாதுகாக்க பாதுகாப்புப் படை முழு வீச்சில் தயாராக உள்ளது.

## ஒரு மணிநேரத்தில் பதிலடி கொடுத்த ஈரானின் IRGC படை.. ஆடிப்போய் நிற்கும் அமெரிக்கா..!


அமெரிக்கா, ஜூன். 01–

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் உலக நாடுகளை அதிர வைக்கும் வகையில் கடந்த 24 மணிநேரத்தில் ராணுவ தாக்குதல்கள் மீண்டும் அதிகரிக்க துவங்கியுள்ளது. ஈரானின் தென் பகுதியில் அமைந்துள்ள ஹார்முஸ்கான் (Hormozgan) மாகாணத்தின் சிரிக் தீவில் (Sirik Island) உள்ள தொலைத்தொடர்பு டவர் (Telecoms Tower) ஒன்றின் மீது அமெரிக்க ராணுவம் சமீபத்தில் வான்வழித் தாக்குதலை நடத்தியிருந்தது. இந்த தாக்குதல் நடவடிக்கை நடந்த அடுத்த ஒரு மணிநேரத்தில், பழிவாங்கும் விதமாக, அமெரிக்கப் படைகள் இந்த தாக்குதலுக்குப் பயன்படுத்திய முக்கிய விமானப்படைத் தளம் (Air–base) மீது ஏவுகணைகள் மற்றும் போர்விமானங்கள் மூலம் மிகக் கடுமையான பதிலடித் தாக்குதலை நடத்தியுள்ளதாக ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படை (IRGC) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.



தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 01.06.2026
விசுவாவசு தமிழ் வருடம்
வைகாசி மாதம் 18-ம் தேதி

# நகை விற்பனை 70% சரிவு... வியாபாரிகள் கவலை! பொதுமக்களுக்கும் பாதிப்பு!!




மத்திய அரசு தங்கம் மீதான இறக்குமதி வரியை அதிரடியாக உயர்த்தியதைத் தொடர்ந்து, இந்தியாவில் தங்கத்திற்கான தேவை சுமார் 70% வரை தலைகீழாகச் சரிந்துள்ளது. ஏற்கனவே சர்வதேசப் பிரச்சனைகளால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்து தவித்து வரும் சாமானிய மக்களுக்கு, இந்த கூடுதல் வரி விதிப்பு பேரிடியாக அமைந்துள்ளது. நுகர்வோரின் வாங்கும் திறன் குறைந்துள்ளதால் தங்க நகை விற்பனை முடங்கி, சிறு வணிகர்கள் கடுமையான பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர்.

ஈரான் போர் போன்ற உலகளாவிய காரணங்களால் சந்தையில் பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருட்களின் விலையும், அன்றாட உணவுப் பொருட்களின் விலையும் ஏற்கனவே விண்ணைத் தொட்டுள்ளன. இதனால் பொதுமக்களின் மாதாந்திர பட்ஜெட் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள சூழலில், தங்கம் மீதான இறக்குமதி வரியை அரசு 6 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக ஒட்டுமொத்தமாக உயர்த்தியுள்ளது.

இந்த இறக்குமதி வரியுடன் சேர்த்து 3 சதவீத சரக்கு மற்றும் சேவை வரியும் இணைக்கப்படுவதால், பொதுமக்கள் தங்கம் வாங்கும்போது செலுத்த வேண்டிய ஒட்டுமொத்த பயனுள்ள வரிச் சுமை 9.18 சதவீதத்திலிருந்து 18.45 சதவீதமாக, அதாவது இரண்டு மடங்கு உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, நுகர்வோரின் அத்தியாவசிய முன்னுரிமைப் பட்டியலிலிருந்து தங்கம் வாங்குவது தற்போது தள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது ஆன்மீக ரீதியாக ‘அதிக மாசம்’ (Adhik Maas) காலம் நடந்து வருவதால், இந்துக்கள் பொதுவாகவே இந்த சமயத்தில் தங்கம் போன்ற மதிப்புமிக்கப் பொருட்களை வாங்கத் தயங்குவதும் தற்போதைய மந்தநிலைக்குக் கூடுதல் காரணமாகும்.

இந்தியாவின் ஒட்டுமொத்த தங்க வர்த்தகத்தில் சுமார் 65 சதவீதப் பங்கைக் கொண்டிருப்பது பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்கமைக்கப்படாத சிறு நகை வணிகத் துறைதான். இந்த கடுமையான வரி உயர்வால் கார்ப்பரேட் நிறுவனங்களை விட, அடித்தட்டு மற்றும் நடுத்தர நுகர்வோரையே நம்பியிருக்கும் இத்தகைய சிறு வியாபாரிகளே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்திய புல்லியன் மற்றும் ஜுவல்லர்ஸ் சங்கத்தின் (IBJA) தேசிய செயலாளர் சுரேந்திர மேத்தா தெரிவித்துள்ளார்.

இதன் நேரடிப் பாதிப்பாக, கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் இரண்டு வாரங்களில் சுமார் 25 டன்களாக இருந்த தங்கத்தின் தேவை, தற்போது வெறும் 7.5 டன்களாகக் குறைந்துபோயுள்ளது. முன்னணி நகைக்கடை நிறுவனமான ‘ஜோயாலுக்காஸ்’ அமைப்பின் தலைவர் ஜாய் அலுக்காஸ் இதுகுறித்துக் கூறுகையில், தங்களது கடைகளில் தங்கத்தின் தேவை 35 சதவீதத்திற்கும் மேல் குறைந்துள்ளதாகக் கவலை தெரிவித்துள்ளார்.

**வரி உயர்விற்கான பின்னணி என்ன?**

பலவீனமடைந்து வரும் இந்திய ரூபாயின் மதிப்பு, சர்வதேச சந்தையில் உயர்ந்து வரும் கச்சா எண்ணெய் விலை மற்றும் உலகளாவிய புவிசார் அரசியல் பதற்றங்கள் ஆகியவற்றைக் கட்டுக்குள் கொண்டு வரவும், நாட்டின் பொருளாதாரத்தைச் சமநிலைப்படுத்தவும் அரசு இந்த வரி உயர்வை மேற்கொண்டுள்ளது. இதுதவிர, ‘முன்பண அங்கீகாரத் திட்டத்தின்’ (Advance Authorisation Scheme) கீழ் வரி இல்லாத இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. மேலும், நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலையைக் கருதி தங்கம் வாங்குவதைக் குறைத்துக் கொள்ளுமாறு பிரதமரின் சிக்கன நடவடிக்கை அழைப்பும் வாடிக்கையாளர்களின் இந்த மனமாற்றத்திற்கு ஒரு முக்கியக் காரணியாகப் பார்க்கப்படுகிறது.

ஆண்டுக்கு 800 முதல் 850 டன்கள் வரை தங்கம் நுகரப்படும் இந்தியச் சந்தையில், இந்த ஆண்டின் முதல் காலாண்டு சிறப்பாகத் தொடங்கினாலும், தற்போதைய வரி உயர்வு காரணமாக 2026–ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் முதலீட்டு ரீதியான தங்கத்தின் தேவையும் பெருமளவில் வீழ்ச்சியடையக்கூடும் என கணிக்கப்படுகிறது.

# 4 மாநிலங்களில் எஸ்.ஐ.ஆர். பணிகள் தொடக்கம்!

புதுடெல்லி, ஜூன். 01–

பீகாரை தொடர்ந்து வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம், தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கும் 2ஆம் கட்டமாக நடத்தப்பட்டது.

3ஆம் கட்டமாக 16 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டது.

இந்நிலையில் 3ஆம் கட்ட எஸ்ஐஆர் பணிகள் ஒடிசா, மிசோரம், சிக்கிம் மற்றும் மணிப்பூர் ஆகிய நான்கு மாநிலங்களில் இன்று (ஜூன் 1) அதிகாரப்பூர்வமாக தொடங்கியுள்ளன.

ஜூன் 28 வரை இந்த பணிகள் நடைபெற்று, ஜூலை 5இல் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். செப்டம்பர் 6இல் இந்த நான்கு மாநிலங்களுக்கான இறுதி வாக்காளர் பட்டியல் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும்.

# 8-வது ஊதியக் குழு: ஓய்வூதியதாரர்களுக்கு ஜாக்பாட்!!

புதுடெல்லி, ஜூன். 01–

மத்திய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு முக்கிய செய்தி. இனி 65 வயது முதலே கூடுதல் ஓய்வூதியம் கிடைக்குமா? வயது வரம்பில் மாற்றம் வரவுள்ளதா? தெரிந்து கொள்ளலாம்.




மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு ஒரு முக்கிய செய்தி உள்ளது. 8 வது மத்திய ஊதியக் குழு (CPC) பல்வேறு நகரங்களில் உள்ள பங்குதாரர்களைத் தொடர்ந்து சந்தித்து வரும் நிலையில், NC–JCM–இன் ‘ஊழியர் தரப்பு’ (Staff Side), ஓய்வுபெற்ற மத்திய அரசு ஊழியர்களுக்கு வயது அடிப்படையிலான ஓய்வூதியக் கட்டமைப்பை அறிமுகப்ப டுத்த முன்மொழிந்துள்ளது.

**8வது ஊதியக் குழுவிடம் அளிக்கப்பட்ட மனு**

8வது மத்திய ஊதியக் குழுவிடம் (8th Pay Commission) அளித்த தங்கள் மனுவில், ஊழியர் தரப்பு முக்கிய விஷயங்களை எடுத்துரைத்துள்ளது, ஊழியர் தரப்பு தனது மனுவில், “ஓய்வுக்குப் பிந்தைய காலத்தில், குறைந்தபட்சம் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு குடும்பத்தை கண்ணியத்துடனும் நிறைவுடனும் பராமரிப்பதற்கு, முழு ஓய்வூதியமானது தற்போதுள்ள 50 சதவீதத்திற்குப் பதிலாக, ‘கடைசியாகப் பெற்ற ஊதியத்தில்’ (LPD) 67 சதவீதமாகவோ அல்லது ‘கடைசி 10 மாதங்களின் ஊதிய சராசரியில்’ (இதில் எது அதிக பயனுள்ளதோ அதைத் தேர்வுசெய்து) 67 சதவீதமாகவோ நிர்ணயிக்கப்பட வேண்டும்.” என்று கூறியுள்ளது.

**கூடுதல் ஓய்வூதியம் என்றால் என்ன?**

மத்திய அரசு பணிகளிலிருந்து ஓய்வுபெற்ற ஓய்வூதியதாரர்களுக்கு 80 வயதிற்கு பிறகு கூடுதல் ஓய்வூதியம் (Additional Pension) வழங்கப்படுகின்றது. ஓய்வூதியதாரர்களுக்கு வயது அதிகமாகும் போது, அவர்களுக்கு பணத்திற்கான தேவையும் அதிகமாகிறது. இதை கருத்தில் கொண்டு மத்திய அரசு 80 வயது முதல் ஓய்வூதியதாரர்களுக்கு கூடுதல் ஓய்வூதியத்தை வழங்கி வருகின்றது. தற்போதுள்ள விதிகளின் படி, 80 வயதில் தொடங்கும் கூடுதல் ஓய்வூதியம் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட அளவில் அதிகரிக்கின்றது.

தற்போது எப்போது, எவ்வளவு கூடுதல் ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது?

| வயது | கூடுதல் ஓய்வூதியம் |
|---|---|
| 80 | 20% கூடுதல் ஓய்வூதியம் |
| 85 | 30% கூடுதல் ஓய்வூதியம் |
| 90 | 40% கூடுதல் ஓய்வூதியம் |
| 95 | 50% கூடுதல் ஓய்வூதியம் |
| 100 | 100% கூடுதல் ஓய்வூதியம் |

**மத்திய அரசு ஊழியர்கள், ஓய்வூதியதாரர்களின் கோரிக்கை**

மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும் கூடுதல் ஓய்வூதியம் அளிக்கப்படும் வயதை மாற்ற வேண்டும் என்று நீண்ட நாட்களாக கோரி வருகின்றனர். பல முறை இது குறித்து ஊழியர் சங்கங்கள் பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளன. எனினும், மத்திய அரசு இதில் இன்னும் தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வில்லை. 8வது ஊதியக்குழுவில் இது குறித்து ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பல்வேறு ஊழியர் சங்கங்களும் இதை வலியுறுத்தி வருகின்றன.

65 வயதில் ஓய்வூதியதாரர்களின் தேவை அதிகரிக்கிறது என்ற பொதுவான கருத்து உள்ளது. ஆகையால், அந்த வயதில் கூடுதல் ஓய்வூதியம் தொடங்கினால், அது, ஓய்வூதியதாரர்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. கூடுதல் ஓய்வூதியம் தொடங்கும் வயதை குறைப்பது பற்றி மத்திய அரசு தீவிரமாக பரிசீலித்து வருவதாகவும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரை**

நாடாளுமன்ற நிலைக்குழுவும் இது குறித்து சமீபத்தில் தனது கருத்தை தெரிவித்திருந்தது. ஓய்வுபெற்ற பிறகு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை 5 சதவீதம் கூடுதல் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்ற நாடாளுமன்ற நிலைக்குழுவின் பரிந்துரையைச் சுட்டிக்காட்டி, ஊழியர் தரப்பு பின்வரும் வயது அடிப்படையிலான ஓய்வூதியக் கட்டமைப்பை முன்மொழிந்துள்ளது:

| வயது | முன்மொழியப்பட்ட ஓய்வூதியம் |
|---|---|
| 65 வயது | கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் (LPD) 70% |
| 70 வயது | கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 75% |
| 75 வயது | கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 80% |
| 80 வயது | கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 85% |
| 85 வயது | கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 90% |
| 90 வயது | கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 100% |


50% குடும்ப ஓய்வூதியம்

மத்திய அரசு ஊழியர்கள் / ஓய்வூதியதாரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் குடும்ப ஓய்வூதியமானது தற்போதுள்ள 30 சதவீதத்திற்குப் பதிலாக 50 சதவீதமாக இருக்க வேண்டும் என்றும் ஊழியர் தரப்பு கூறியுள்ளது. மேலும், உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியத்தைப் பெறும் கால வரம்பானது 70 வயது வரை நீட்டிக்கப்படலாம் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியம் என்பது ஒரு உரிமை**

தங்கள் மனுவில், 8–வது மத்திய ஊதியக் குழுவின் ‘பணி வரம்புகளிலிருந்து’ (Terms of Reference) ஏற்கனவே ஓய்வூதியம் பெற்று வருபவர்களை விலக்கி வைத்திருக்கும் விவகாரத்தை ஊழியர் தரப்பு குறிப்பிட்டுள்ளது. பல்வேறு உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள், குறிப்பாக 17/12/1982 தேதியிட்ட ‘நகாரா தீர்ப்பு’ (Nakara Judgment), “ஓய்வூதியம் என்பது ஒரு கொடையோ அல்லது கருணைத் தொகையோ அல்ல; அது ஒரு அடிப்படை உரிமை” என்று உறுதிப்படுத்தியுள்ளதை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# அண்ணாமலை போடும் புது கணக்கு..!




சென்னை, ஜூன். 01–

அண்ணாமலை புதிய கட்சியை தொடங்குவார் என அனைவரும் எதிர்பார்த்து வரும் நிலையில், அவர் வேறொரு திட்டத்தை கையில் வைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அவர் ஓர் இயக்கம் தொடங்கி இளைஞர்களை அரசியல்படுத்தும் நோக்கத்துடன் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த யூகங்களுக்கு நடுவே இன்று அண்ணாமலை டெல்லி புறப்பட்டு சென்றார். அங்கு அவர் பாஜக தலைவர் நிதினை சந்திக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன

**இயக்கமாக மாறும் We The Leaders தொண்டு நிறுவனம்?**

அண்ணாமலை தற்போது We The Leaders என்ற தொண்டு நிறுவனத்தை நடத்தி வருகிறார். இது கோவையை மைப்படுத்தி செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், இதை இயக்கமாக மாற்ற திட்டமிட்டிருக்கிறார். இதனுடைய பெயரை மாற்றி செயல்படுத்த இருப்பதாக கூறப்படுகிறது. இதில் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களை கொண்டு வந்து அவர்களுக்கு அரசியல் சார்ந்த பயிற்சி அளிக்க அண்ணாமலை திட்ட மிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. அதனால் தற்போதைக்கு புதிய கட்சியை தொடங்கும் திட்டத்தில் அண்ணாமலை இல்லை என்று கூறப்படுகிறது.

**அண்ணாமலை கட்சி தொடங்குவது எப்போது?**

இந்த இயக்கத்தின் மூலம் கிடைக்கும் வரவேற்பை பொறுத்து கட்சி தொடங்கலாமா வேண்டாமா என்ற முடிவை எடுக்க அண்ணாமலை ஆலோசித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

தமிழக அரசியலில் அண்ணாமலையின் அடுத்தக்கட்ட நகர்வு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. நேரடியாக கட்சி தொடங்காமல், இளைஞர்களை திரட்டி இயக்கம் மூலம் அடித்தளத்தை வலுப்படுத்த அவர் எடுக்கும் இந்த வியூகம், அவருக்கு மக்கள் மத்தியில் இருக்கும் செல்வாக்கை சோதித்தறியும் ஒரு முக்கிய பரீட்சையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

# சினிமா துளிகள்..!

## பிரபல பாடகி சுமன் கல்யாண்பூர் உயிரிழப்பு!




காலத்தால் அழியாத வெற்றிப் பாடல்களுக்கு பெயர் பெற்ற மூத்த பாடகி சுமன் கல்யாண்பூர், உடல்நல பிரச்சினைகளால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை அவரது இல்லத்தில் காலமானதாக நெருங்கிய நண்பர் ஒருவர் தெரிவித்தார். “லோகண்ட்வாலாவில் உள்ள தனது இல்லத்தில், முதுமை காரணமாக சுமன் ஜி இரவு சுமார் 8 மணியளவில் காலமானார். அவர் அமைதியாக உயிர் நீத்தார். கடந்த சில நாட்களாக, அவர் தனது சொந்தப் பாடல்களையே கேட்டு வந்தார்,” என்று சுமன் சுகந்த் தெரிவித்தார்.


கல்யாண்பூர் 1960கள் மற்றும் 1970களில் தனது இனிமையான குரலால் புகழ்பெற்றார். அக்காலகட்டத்தின் முன்னணி பின்னணிப் பாடகியான லதா மங்கேஷ்கருடன் இணைந்து தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்தார்.

ஆஜ்கல் தேரே மேரே ப்யார் கே சார்ச்சே, நா நா கர்தே ப்யார் தும்ஹின் சே மற்றும் தும்னே புகாரா அவுர் ஹம் சாலே ஆயே ஆகியவை அவரது மிகவும் பிரபலமான பாடல்களில் சில. அவர் இந்தி, மராத்தி, அஸ்ஸாமி, கன்னடம், பெங்காலி மற்றும் ஒடியா உள்ளிட்ட பல மொழிகளில் பாடல்களைப் பதிவு செய்தார். மேலும் அவர் பக்திப் பாடல்கள், கஜல்கள் மற்றும் தும்ரிகளையும் பாடினார்.

## குஷ்புவின் வருங்கால மருமகன் யார்?



பிரபல நட்சத்திர தம்பதிகளான குஷ்பு மற்றும் இயக்குநர் சுந்தர் சி.யின் மூத்த மகள் அவந்திகாவிற்கு விரைவில் திருமணம் நடைபெற உள்ளது. இதையொட்டி, குஷ்பு – சுந்தர் சி. தம்பதியினர் தங்களது மகள் மற்றும் வருங்கால மருமகனுடன் டெல்லிக்கு சென்று பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து திருமண அழைப்பிதழ் வழங்கியுள்ளனர். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வெளியானதை தொடர்ந்து, குஷ்புவின் மருமகன் யார் என்ற ஆர்வம் ரசிகர்களிடையே அதிகரித்துள்ளது.சென்னையை சேர்ந்த ஷ்ரவன், மொர்ச்சன்ட் நேவியில் அதிகாரியாக பணிபுரிந்து வருகிறார்”



# குரு ஆசீர்வாதம்! செழிக்கும் ராசிக்காரர்கள்!




சுப காரியங்களுக்கும் மங்கலப் பலன்களுக்கும் காரணமான குரு பகவான், ஜூன் 2 முதல் அக்டோபர் 31 வரை கடக ராசியில் உச்ச நிலையில் சஞ்சரிக்கிறார்; எனவே, சிலருடைய வாழ்வில் நற்செய்திகளும் சுப பலன்களும் உண்டாகச் சிறந்த வாய்ப்புகள் உள்ளன. நீண்ட காலமாகத் தடைபட்டிருந்த சுப காரியங்கள் நிச்சயமாக நிறைவேறும். வேலைவாய்ப்புக்கான முயற்சிகள் கைகூடும். வருமானம் பெருகும். நல்ல திருமணங்கள் நடைபெறும். குறிப்பாக, குழந்தைப்பேறு உண்டாகும். குறிப்பிட்ட சில ராசிக்காரர்களின் வாழ்வில் இக்காலகட்டத்தில் பெரும்பாலும் சுப பலன்களே நிகழும். மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், விருச்சிகம், மகரம் மற்றும் மீனம் ஆகிய ராசிகளின் நிலை இக்காலகட்டத்தில் ஒரு புதிய திருப்பத்தை அடையப்போகிறது.

**மேஷம்:** இந்த ராசிக்கு நான்காம் இடத்தில் குரு பகவான் உச்ச நிலையில் சஞ்சரிப்பதால், இந்த ராசிக்காரர்களுக்கு நிச்சயமாக வீடு மற்றும் வாகன யோகம் உண்டாகும். சொந்த வீடு குறித்து இவர்கள் நீண்ட காலமாக மனதில் வளர்த்து வந்த கனவுகள் அனைத்தும் நனவாகும். இவர்களால் ஓரளவிற்கேனும் அசையாச் சொத்துக்களைச் சேர்க்க இயலும். அடிக்கல் நாட்டு விழா மற்றும் புதுமனை புகுவிழாக்கள் மட்டுமின்றி, வீட்டில் திருமணங்கள் மற்றும் பிற சுப நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. இவர்களுக்குப் பெரும்பாலும் நற்செய்திகளே வந்து சேரும். வேலைவாய்ப்பு மற்றும் திருமணம் தொடர்பான முயற்சிகள் அனைத்தும் வெற்றியில் முடியும்.

**மிதுனம்:** இந்த ராசிக்கு ‘தனம்’ மற்றும் ‘குடும்பம்’ ஆகிய இடங்களான இரண்டாம் வீட்டில் குரு பகவான் சஞ்சரிப்பதால், இவர்களது வாழ்வில் எதிர்பாராத திருப்பங்கள் உண்டாகும். இவர்களது மனதிற்குள் இருக்கும் பெரும்பாலான ஆசைகள் நிறைவேறும். நல்ல முறையில் செல்வத்தைச் சேர்ப்பதுடன், திடீர் பண வரவுக்கான வாய்ப்புகளும் உள்ளன. குடும்ப உறுப்பினர்களின் வாழ்வில் முன்னேற்றம் உண்டாகும். இவர்கள் அளிக்கும் ஆலோசனைகள் மற்றும் கருத்துக்களுக்குப் பெருமதிப்பு கிடைக்கும். இவர்கள் விரும்பிய வெளிநாட்டுத் தொடர்புகள் அல்லது வாய்ப்புகள் கைகூடும். காதல் விவகாரங்கள் சுமுகமாக அமையும். குழந்தைப்பேறு உண்டாவதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

**கடகம்:** இந்த ராசியிலேயே குரு பகவான் உச்ச நிலையில் சஞ்சரிப்பதால், இந்த ராசிக்காரர்கள் அரசர்களுக்கு இணையான மதிப்பையும் மரியாதையையும் பெறுவார்கள். இவர்களுக்கு அரசியல் ரீதியான செல்வாக்கும் உண்டாகும். இவர்கள் தொடும் காரியங்கள் அனைத்தும் பொன்னாக (வெற்றியாக) மாறும். இவர்களது மனதில் உள்ள பெரும்பாலான ஆசைகளும், நீண்ட காலமாக இவர்கள் மனதில் சுமந்து வந்த கனவுகளும் நிறைவேறும். வீட்டில் திருமணம், புதுமனை புகுவிழா போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். நிதி மற்றும் தனிப்பட்ட வாழ்வில் இருந்த பிரச்சனைகள் அனைத்தும் முழுமையாகத் தீர்ந்து, இவர்கள் மன நிம்மதி அடைவார்கள்.

**கன்னி:** இந்த ராசிக்குச் சாதகமான இடத்தில் குரு பகவான் சஞ்சரிப்பதால், இவர்கள் ஒரு சாதாரணமான வாழ்க்கை நிலையிலிருந்து விலகி, மிகவும் செழிப்பான மற்றும் வளமான வாழ்க்கையை நோக்கி முன்னேறுவதற்கான அரிய வாய்ப்பைப் பெறுவார்கள். குருவின் பலம் தெய்வீக ஆசீர்வாதங்களைக் கொண்டுவரும். பல வழிகளில் வருமானம் பெருகும் வாய்ப்புள்ளது. நீண்டகாலமாக இருந்துவந்த நிதி மற்றும் தனிப்பட்ட பிரச்சனைகளிலிருந்து விடுதலை கிடைக்கும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும். குடும்பப் பிரச்சனைகள் முழுமையாகத் தீரும். சொந்த வீடு அமையும் யோகம் நிச்சயமாகக் கைகூடும். குழந்தை பாக்கியம் உண்டாகும் வாய்ப்புள்ளது.

**துலாம்:** இந்த ராசியின் பத்தாம் வீட்டில் உச்சம் பெற்ற குரு சஞ்சரிப்பதால், இந்த ராசியைச் சேர்ந்தவர்களுக்குத் தங்கள் வேலையில் சிறப்பான பலன்கள் கிடைக்கும். இவர்களின் தொழில் வாழ்க்கை உயர்ந்த நிலையை எட்டும். அனைத்து வகையிலும் இவர்கள் அதிர்ஷ்டசாலிகளாகத் திகழ்வார்கள். இவர்களின் நிதி நிலைமையும் உடல்நலமும் எதிர்பாராத வகையில் மேம்படும். ஒன்று அல்லது இரண்டு முக்கியமான சுப நிகழ்வுகள் நடைபெறும். குழந்தை பாக்கியம் உண்டாகும் வாய்ப்புள்ளது. திருமண முயற்சிகள் வெற்றியில் முடியும். வசதிமிக்க குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் இவர்கள் காதல் வயப்படுவார்கள்.

**விருச்சிகம்:** இந்த ராசியின் ஒரு சுப ஸ்தானத்தில் உச்சம் பெற்ற குரு சஞ்சரிப்பதால், வெளிநாட்டில் பணிபுரிய வேண்டும் என்ற இந்த ராசியினரின் நீண்டகால ஆசை நிறைவேறும். மனதின் விருப்பங்கள் ஈடேறும். குடும்ப வாழ்க்கை சீராக நடைபெறும். காலத்தை நீங்கள் எவ்வளவு சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்கிறீர்களோ, அந்தளவுக்கு நன்மைகள் பெருகும். குழந்தை பேறு தொடர்பான நற்செய்தியை நீங்கள் கேட்பீர்கள். நீங்கள் தொடும் காரியங்கள் அனைத்தும் பொன்னாக மாறும்... தொழில், வேலை மற்றும் வியாபாரம் ஆகியவற்றில் புதிய முன்னேற்றங்கள் ஏற்படும்.

**மகரம்:** இந்த ராசியின் ஏழாம் வீட்டில் குரு உச்சம் பெறுவதால், வாழ்க்கையில் எதிர்பாராத சுப நிகழ்வுகள் நடைபெறும். குறிப்பாக, ஏழாம் வீடு என்பது திருமணம், காதல் மற்றும் வெளிநாட்டுப் பயணம் போன்ற விஷயங்களுடன் தொடர்புடைய இடமாக இருப்பதால், விரும்பிய திருமண பந்தம் அமைதல், காதல் முயற்சிகளில் வெற்றி பெறுதல் மற்றும் வெளிநாட்டில் பணிபுரியும் கனவு நிறைவேறுதல் ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. குருவின் அனுகூலத்தால், இவர்களின் வாழ்க்கை அனைத்துத் துறைகளிலும் உயர்ந்த நிலையை எட்டும்.

**மீனம்:** இந்த ராசியின் அதிபதியான குரு, ஐந்தாம் வீட்டில் உச்சம் பெற்று சஞ்சரிப்பதால், இந்த ராசியினருக்குக் குழந்தை பாக்கியம் உண்டாகும் வாய்ப்புள்ளது. குழந்தைகள் வாழ்வில் பெரும் வெற்றிகளைப் பெறுவார்கள். குழந்தைகளில் ஒருவருக்கு, உயர்கல்விக்காகவோ அல்லது வேலைக்காகவோ வெளிநாட்டில் குடியேறும் வாய்ப்பு அமையும். அரச மரியாதை போன்ற உயரிய கௌரவங்கள் இவர்களுக்குக் கிடைக்கும். மிகக் குறைந்த முயற்சியிலேயே பெரும் செல்வந்தர்களாக மாறும் வாய்ப்புள்ளது. தங்களுக்கு வர வேண்டிய பணத்துடன் சேர்த்து, எதிர்பாராத வகையிலும் பணம் வந்து சேரும். பெரும் செல்வம் ஈட்டும் யோகம் இவர்களுக்கு உண்டு.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

## பிரியாணியோடு இந்த 5 உணவுகளை சேர்த்து சாப்பிடாதீங்க..!




தென்னிந்தியாவில் பெரும்பாலானோரின் மிகவும் பிரியமான உணவு என்னவென்று கேட்டால் பலரும் பிரியாணியைத் தான் சொல்வார்கள். இந்த பிரியாணியை சாப்பிட எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பயணிப்பார்கள். அப்படிப்பட்ட பிரியாணியில் ஏராளமான மருத்துவ குணமிக்க மசாலா பொருட்கள் சேர்க்கப்பட்டிருந்தாலும், கொழுப்புக்களும் அதிகம் இருக்கக்கூடும் என்பதால், இந்த பிரியாணியை சாப்பிடும் போதும் சரி, சாப்பிட்டதும் சரி ஒருசில உணவுகளை உட்கொள்ளக்கூடாது. அவ்வாறு சாப்பிட்டால், அது செரிமானத்தில் இடையூறை ஏற்படுத்துவதோடு, பல்வேறு அசௌகரியங்களையும் உண்டாக்கும்.

**1. தர்பூசணி, முலாம்பழம்**

"பிரியாணி சாப்பிட்ட உடனேயே தர்பூசணி, முலாம் பழம் போன்ற நீர்ச்சத்து நிறைந்த பழங்களை உட்கொள்ளக்கூடாது. ஏனெனில் இதை சாப்பிடும் போது பிரியாணியில் உள்ள எண்ணெயுடன் நீர்ச்சத்து அதிகம் சேர்ந்து, வாய்வு தொல்லை, வயிற்று உப்புசம் போன்றவற்றை ஏற்படுத்தும். இதன் விளைவாக சிலருக்கு வயிற்று வலி, வயிற்று அசௌகரியம், குமட்டல் உணர்வு போன்றவை வரலாம். எனவே இவற்றைத் தவிர்க்க பிரியாணி சாப்பிட்டபிறகு இந்த பழங்களை சாப்பிடாதீர்கள்"

**2. பால் மற்றும் பால் பொருட்கள்**

"சிலருக்கு பிரியாணி சாப்பிட்டதும் டீ குடிக்க பிடிக்கும். சிலருக்கு இதனால் ஒன்றும் ஆகாது. ஆனால் சிலருக்கு பால் அல்லது பால் சம்பந்தப்பட்ட பொருட்கள் எடுக்கும் போது அஜீரண கோளாறு வருவதற்கான வாய்ப்புள்ளது. எனவே இவற்றைத் தவிர்க்க வேண்டும்"

**3. எண்ணெயில் பொரித்த உணவுகள்**

"பிரியாணி சாப்பிடும் போது எண்ணெயில் பொரித்த சிக்கன் 65 சாப்பிட பிடிக்கும். ஆனால் இப்படி எண்ணெயில் பொரித்த உணவுகளை சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் ஏற்கனவே பிரியாணியில் கொழுப்பு அதிகம் இருக்கும். இந்நிலையில் எண்ணெயில் பொரித்ததையும் உட்கொள்ளும் போது, உடலில் கொழுப்புகள் இன்னும் அதிகரிக்கும் மற்றும் செரிமான பிரச்சனைகளையும் சந்திக்க நேரிடும். ஆகவே இப்படி எண்ணெயில் பொரித்த உணவுகளை பிரியாணி சாப்பிடும் போதோ அல்லது சாப்பிட்டு முடித்த பின்னரோ சாப்பிடுவதைத் தவிர்த்திடுங்கள்"

**4. இனிப்பு பொருட்கள்:**

"பிரியாணி சாப்பிட்டதும் சிலருக்கு இனிப்பு சாப்பிடும் பழக்கம் இருக்கும். இப்படி சாப்பிடுவதால் செரிமானம் நன்கு நடக்கும் என்று பலர் சாப்பிடுவதுண்டு. ஆனால் உண்மையில் இப்படி சாப்பிடும் போது, இரத்த சர்க்கரை சட்டென்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. எனவே இதையும் தவிர்க்க வேண்டும்"

**5. தண்ணீர் அதிகம் குடிக்கக்கூடாது:**

"பிரியாணி சாப்பிட்ட உடனேயே அதிகளவில் நீரை அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் தர்பூசணி பழத்தைப் போன்றே, தண்ணீரும் வயிற்றில் இருக்கும் பிரியாணியின் எண்ணெயுடன் சேர்ந்து வயிற்று உப்புசம், வாய்வு தொல்லை போன்றவற்றை ஏற்படுத்தும்"

**இந்த உணவுகளால் உயிருக்கு ஆபத்து ஏற்படுமா?**

மேலே கொடுக்கப்பட்டுள்ள உணவுகளை பிரியாணி சாப்பிடும் போதோ அல்லது சாப்பிட்ட உடனேயோ சாப்பிட்டால் உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படாது. வயிற்று கோளாறுகள் போன்ற அசௌகரியங்களையே சந்திக்க நேரிடும். மேலும் பிரியாணியை சமைக்கும் போது இறைச்சிகள் சரியாக வேகாமல் இருந்தாலும், அதன் விளைவாக பிரச்சனைகள் வருவதற்கான வாய்ப்புள்ளது. அதுமட்டுமின்றி பொதுவாக ஒரு உணவை உட்கொண்டால், மற்ற உணவை உட்கொள்ள குறைந்தது 2 மணிநேர இடைவெளி விட்டால் தான், மோசமான விளைவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியும். மேலும் உணவு உட்கொண்ட பின் உட்கார்ந்திருக்காமல், ஒரு 20 நிமிடம் லேசான நடைபயிற்சிய மேற்கொள்ள வேண்டும். முக்கியமாக இரவு நேரத்தில் பிரியாணி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். மதிய வேளையில் பிரியாணியை சாப்பிடலாம்.



தேனி மாவட்டத்திற்கு வருகை தந்த தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்த துறை அமைச்சர் செல்வி கீர்த்தனாவிற்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

# மாநிலங்களவை எம்.பி. வேட்பு மனு தாக்கல்: தவெக வேட்பாளர் யார்?



சென்னை, ஜூன். 01–

தமிழகம் உட்பட 13 மாநிலங்களில் காலியாக உள்ள 27 மாநிலங்களவைஎம். பி.க்களைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் அறிவிக்கையை தலைமைத் தேர்தல் ஆணையம் அண்மையில் வெளியிட்டது. இதில் 24 இடங்கள் வழக்கமாக நடைபெறும் தேர்தல் மூலமாகவும் 3 இடங்கள் இடைத்தேர்தல் வாயிலாகவும் நிரப்பப்பட உள்ளன. அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜூன கார்கே, முன்னாள் பிரதமர் தேவேகவுடா, காங்கிரஸ் எம்.பி. திக்விஜய் சிங் ஆகியோர் தற்போது மாநிலங்களவை எம்.பி.க்களாக உள்ளனர்.

இவர்கள் உள்பட 24 உறுப்பினர்களின் பதவிக்காலம் வருகிற 21–ந்தேதியில் இருந்து ஜூலை மாதம் 19–ந்தேதி வரையிலான காலக்கட்டத்தில் பல்வேறு நாட்களில் முடிவடைகிறது. இந்த 24 பதவியிடங்களும் கர்நாடகம், ஆந்திரா, குஜராத், மத்திய பிரதேசம், ராஜஸ்தான், ஜார்கண்ட், மணிப்பூர், மேகாலயா, அருணாசலபிரதேசம் மற்றும் மிசோரம் ஆகிய 10 மாநிலங்களில் காலியாகிறது. இதில் ஆந்திரா, குஜராத் மற்றும் கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் தலா 4 இடங்களும் மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் தலா 3 இடங்களும், ஜார்கண்டில் 2 இடங்களும், மணிப்பூர், மேகாலயா, அருணாசல பிரதேசம் மற்றும் மிசோரம் ஆகிய மாநிலங்களில் தலா 1 இடமும் காலியாகிறது.

**சி.வி.சண்முகம் ராஜினாமா**

இதனை முன்னிட்டு இந்த இடங்களை நிரப்புவதற்காக இந் திய தேர்தல் கமிஷன் கடந்த மாதம் 22–ந்தேதி தேர்தல் தேதியை அறிவித்தது. அதன்படி வருகிற 18–ந்தேதி தேர்தல் நடக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.அ.தி.மு.க. எம்.பி. சி.வி.சண்முகம், விழுப்புரம் மாவட்டம் மயிலம் சட்டசபை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி ஒருவர் ஒரு பதவியை மட்டுமே வகிக்க முடியும். எனவே எம்.எல்.ஏ.வாக பதவி ஏற்பதற்கு முன்பு மாநிலங்களவை எம்.பி. பதவியை சி.வி.சண்முகம் ராஜினாமா செய்தார். அவரது பதவிக்காலம் வருகிற 2028–ம் ஆண்டு ஜூன் 29–ந்தேதி வரை இருந்தது.

**வேட்புமனு தாக்கல்**

இந்தநிலையில் அவரது ராஜினாமா கடிதம் மாநிலங்களவை செயலகம் மூலம் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அதன்பின்னர் அந்த இடம் காலியாக இருப்பது இந்திய தேர்தல் கமிஷனுக்கு பரிந்துரைக்கப்பட்டது. அந்த காலியிடத்தை நிரப்புவதற்கான அறிவிப்பை தேர்தல் கமிஷன் கடந்த 22–ந்தேதி வெளியிட்டது. அதன்படி மாநிலங்களவை எம்.பி. பதவிக்கான வேட்புமனு தாக்கல் இன்று (திங்கட்கிழமை) தொடங்குகிறது. வேட்புமனு தாக்கல் செய்ய கடைசிதேதி 8–ந்தேதியாகும்.

வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை வருகிற 9–ந்தேதியும், வேட்புமனு திரும்ப பெற கடைசி தேதி வருகிற 11–ந்தேதியாகும். தொடர்ந்து வருகிற 18–ந்தேதி காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை வாக்குப்பதிவு நடக்கிறது. அன்று மாலை 5 மணிக்கு வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படுகிறது.

**த.வெ.க.வுக்கு வாய்ப்பு**

மாநிலங்களவை எம்.பி தேர்தலுக்கு சில வாய்ப்புகள் மூலம் தேர்தல் நடக்கிறது. அதன்படி முதல் வாய்ப்பு, போட்டியிடும் வேட்பாளருக்கு மற்றவர்களை விட அதிக எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு இருந்தால் அவரே தேர்வு செய்யப்படுவார். அந்த முறைப்படி த.வெ.க.வுக்கு அதிக எம்.எல், .ஏ.க்கள் உள்ளனர். எனவே த.வெ.க. நிறுத்தும் வேட்பாளரே வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளது. இதனால் மற்ற கட்சிகள் வேட்பாளரை நிறுத்த வாய்ப்பு மிகக் குறைவு. அதன்படி பார்த்தால் வாக்குப்பதிவு நடக்காமலேயே போட்டியின்றி த.வெ.க வேட்பாளர் தேர்வு செய்யப்படுவார்.

**விரைவில் விஜய் அறிவிப்பு**

அதன் மூலம் த.வெ.க. கட்சி முதன் முதலாக டெல்லிக்கு சென்று நாடாளுமன்றத்தில் கால் பதிக்க முடியும். த.வெ.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர் யார் என்பதை முதல்–அமைச்சர் விஜய் விரைவில் அறிவிப்பார். இதுதொடர் பாக கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் அவர் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறார். வேட்பு மனு தாக்கல் முடிவடைய ஒருவாரம் இருப்பதால் அதற்குள் வேட்பாளர் அறிவிக்கப்படு வார். இதேபோல், மராட்டிய மாநிலத்தில் சுனேத்ர அஜித் பவார் ராஜினாமா செய்த இடத்துக்கும் இடைத்தேர்தல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்-அமைச்சர் விஜய் திருச்சி வருகை: போக்குவரத்து மாற்றம்!




சென்னை, ஜூன். 01–

முதல்–அமைச்சர் விஜய், திருச்சியில் உள்ள பொதுக்கூட்டத்தில் பங்கேற்க உள்ள நிலையில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக வெளியான அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது;– தமிழ்நாடு முதல்–அமைச்சர் (01.06.2026) திருச்சிராப்பள்ளி மாநகரத்திற்கு வருகை புரிவதால் காலை 10.00 மணி முதல் மத்திய பேருந்து நிலையம் மற்றும் திருவெறும்பூரிலிருந்து சத்திரம் பேருந்து நிலையத்திற்கு செல்லும் மாநகர பேருந்துகள் அனைத்தும் மரக்கடை வழியாக மெயின்கார்டுகேட் காந்தி சிலை அருகில் பயணிகளை இறக்கி விட்டு மேல அரண்சாலை (W.B) வழியாக செல்ல வேண்டும்.

திருவாணைக்கோவில் வழியாக வரும் பேருந்துகள் அனைத்தும் மாம்பழசாலையில் இறக்கி விட்டு திரும்பி செல்ல வேண்டும். கரூர் சாலையிலிருந்து வரும் பேருந்துகள் சத்திரம் பேருந்து நிலையத்திற்கு செல்லாமல் கே.டி சந்திப்பு, சாஸ்த்திரி சாலை வழியாக மத்திய பேருந்து நிலையம் செல்ல வேண்டும். கடலூர், பெரம்பலூர், அரியலூரிலிருந்து வரும் பேருந்துகள் திருவாணைக்கோவில் வழியாக சத்திரம் பேருந்து நிலையத்திற்கு செல்லாமல் கொள்ளிடம் புறவழி சாலை வழியாக மத்திய பேருந்து நிலையம் செல்ல வேண்டும். சத்திரம் பேருந்து நிலையத்திற்கு பேருந்துகள் செல்ல அனுமதியில்லை.

தமிழ்நாடு முதல்–அமைச்சர் 01.06.2026 அன்று திருச்சிராப்பள்ளி மாநகரத்திற்கு வருகை புரிவதால் காலை 07.00 மணி முதல் மதுரையிலிருந்து சென்னை செல்லும் கனரக வாகனங்கள் துவரங்குறிச்சியிலிருந்து மணப்பாறை, குளித்தலை, முசிறி பெரம்பலூர் வழியாகவும், திண்டுக்கலிலிருந்து சென்னை செல்லும் கனரக வாகனங்கள் மணப்பாறையிலிருந்து குளித்தலை, முசிறி, பெரம்பலூர் வழியாகவும், சென்னையிலிருந்து மதுரை, திண்டுக்கல் செல்லும் கனரக வாகனங்கள் பெரம்பலூரிலிருந்து முசிறி, குளித்தலை, மணப்பாறை வழியாக செல்ல வேண்டும்.

தஞ்சாவூர், புதுக்கோட்டை செல்லும் கனரக வாகனங்கள் பெரம்பலூரிலிருந்து, அரியலூர் வழியாக செல்ல வேண்டும். புதுக்கோட்டையிலிருந்து சென்னை செல்லும் கனரக வாகனங்கள் தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர் வழியாக செல்ல வேண்டும். தஞ்சாவூரிலிருந்து கரூர் செல்லும் கனரக வாகனங்கள் அரியலூர், பெரம்பலூர், துறையூர் வழியாக செல்ல வேண்டும். கரூரிலிருந்து தஞ்சாவூர் செல்லும் கனரக வாகனங்கள் குளித்தலை, முசிறி, பெரம்பலூர், அரியலூர் வழியாக செல்ல வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் பிரத்திக் தயாள் தெரிவித்துள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வேலை வாய்ப்பு

## டிஎன்பிஎஸ்சி தொழில்நுட்ப ஆட்சேர்ப்பு – 461 பணியிடங்கள்!




**TNPSC:** நேர்காணல் இல்லாத பல்வேறு பதவிகளுக்கான டிஎன்பிஎஸ்சி (TNPSC) ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வுக்கான ஆன்லைன் விண்ணப்ப பதிவு தற்போது அதிகாரப்பூர்வமாகத் தொடங்கியுள்ளது. இந்தத் தேர்வின் மூலம் தமிழக அரசின் பல்வேறு துறைகளில் உள்ள 46 விதமான தொழில்நுட்ப பதவிகளில் காலியாக இருக்கும் மொத்தம் 461 பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் ஜூன் 25–ம் தேதி வரை ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**காலிப்பணியிடங்கள் மற்றும் கல்வித் தகுதி**

இந்த ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வின் மூலம் உதவி ஜியாலஜிஸ்ட், உதவி பொறியாளர், தோட்டக்கலை அலுவலர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார உதவி இயக்குநர், வேளாண் விரிவாக்க அலுவலர், சுற்றுச்சூழல் விஞ்ஞானி, சட்டத்துறை மொழிபெயர்ப்பாளர் மற்றும் உதவி நூலகர் உள்ளிட்ட 46 வகையான பதவிகள் நிரப்பப்படவுள்ளன.

இதற்கான கல்வித் தகுதியாகப் பதவிகளுக்கு ஏற்றவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப கல்வித் தகுதிகளைப் பெற்ற பட்டதாரிகள் மற்றும் முதுகலை பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். வயது வரம்பு, தேர்வு கட்டணம், பாடத்திட்டம் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை உள்ளிட்ட முழுமையான விவரங்களை விண்ணப்பதாரர்கள் www.tnpsc.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**முதன்முறையாக ஜூனியர் போட்டோகிராபர் பதவி**

இந்த அறிவிப்பில் மிக முக்கிய அம்சமாக, தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறையில் உள்ள 'ஜூனியர் போட்டோகிராபர்' (Junior Photographer) என்ற பதவியில் உள்ள 23 காலிப்பணியிடங்கள், முதன்முறையாக டிஎன்பிஎஸ்சி வாயிலாக நிரப்பப்படவுள்ளன. இப்பதவிக்கு பிஎஸ்சி விஷ்வல் கம்யூனிகேஷன் (B.Sc Visual Commu–nication) பட்டப்படிப்பு முடித்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.




சண்சரண் சமூகம் மற்றும் கல்வி நல அறக்கட்டளை, மதுரை இலக்கிய பேரவை நிறுவுனர், சண்முகதிருக்குமரன் அவர்கள் தலைமையில் நடத்துகிற "பேசும்கலை பேச்சுக்கலை" 250 ஆவது வாரம் பேச்சுப்பயிற்சிப் பட்டறை நிகழ்வில் நிலா இலக்கிய மன்றம் தலைவர் கவிக்குயில் கணேசன் சிறப்பாளராக கலந்துகொண்டு "ஆதலால் கவிதை செய்வோம்" எனும் தலைப்பில் பேசி பயிற்சி அளித்திட அறக்கட்டளை செயலர், போத்திராஜா,பொருளாளர் ராம்நாத்பாபு மற்றும் நிர்வாக அறங்காவலர் திருமதி வைஜெயந்திமாலா,ராமசுப்பிசுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொள்ள ஏராளமானவர்கள் பயிற்சி பெற்றனர்.

# கோடை விடுமுறை முடிந்து சொந்த ஊர் திரும்பும் பயணிகள்; ரெயில், பஸ் நிலையங்களில் அலைமோதும் கூட்டம்!



சென்னை, ஜூன். 01–

தமிழ்நாட்டில் கோடை விடுமுறை முடிந்து கல்வி நிலையங் கள் மற்றும் அனைத்து அலுவலகங்களும் மீண்டும் செயல்பட தொடங்குகின்றன. கடுமையான கோடை வெப்பம் காரணமாக கல்வி நிலையங்கள் ஜூன் 4–ந் தேதி திறக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. ஆனாலும் குழந்தைகளுக்கு சீருடை தைப்பது, பள்ளி பைகள், நோட்டுப் புத்தகங்கள் வாங்குவது உள்ளிட்ட பணிகளில் பெற்றோர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதையடுத்து கோடை விடுமுறையை சொந்த ஊர்களிலும், சுற்றுலாத் தலங்களிலும் மகிழ்ச்சியாக கழிப்பதற்காக வெளியூர் சென்றிருந்த சென்னை மற்றும் புறநகர் பகுதி மக்கள், மீண்டும் சென்னைக்கு திரும்பி வரத் தொடங்கியுள்ளனர்.

இதனால், கடந்த இரு தினங்களாக பஸ் ஸ்டாண்ட், ரயில் நிலையங்களில் பயணிகள் கூட்டம் அலைமோதுகிறது. நெல்லை, மதுரை, திருச்சி பேருந்து நிலையங்களில் சென்னை நோக்கி வந்த பஸ்கள் அனைத்தும் ஹவுஸ் புல் ஆக வந்தன. டிக்கெட் புக் செய்யாமல் வந்த பயணிகள் பஸ்களில் இடம் கிடைக்காமல் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். ரயில்களில் முன்பதிவு இல்லாத பெட்டிகளிலும் நிற்க கூட இடமில்லாத அளவிற்கு கூட்டம் அதிகமாக இருந்தது.

அதேபோல, திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் வாகன போக்குவரத்து வழக்கத்தை விட அதிகரித்து காணப்பட்டது. விக்கிரவாண்டி, பரனூர் சுங்கச்சாவடிகளில் வாகனங்கள் நீண்ட தொலைவுக்கு அணிவகுத்து நின்றன. இன்றும் கூட சென்னைக்கு வருவதற்கான பெரும்பாலான ரெயில்களில் டிக்கெட்டுகள் இல்லை. அதேபோல் தனியார் ஆம்னி பஸ்களில் பல மடங்கு கூடுதல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அரசு பஸ்கள் கூடுதலாக இயக்கப்பட்டாலும், அவற்றிலும் கூட்டம் நிரம்பி வழிகிறது. இதனால் கூடுதல் பஸ்களை இயக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# என்ஜினீயரிங் படிப்புக்கு விண்ணப்பிக்க கடைசி நாள்?



சென்னை, ஜூன். 01–

என்ஜினீயரிங் படிப்புகளில் சேருவதற்கான கலந்தாய்வுக்கு ஆன்லைன் விண்ணப்பப்பதிவு கடந்த மாதம் மே–3ந்தேதி தொடங்கியது. விண்ணப்பப்பதிவு தொடங்கியதில் இருந்து மாணவ–மாணவிகள் ஆர்வமுடன் விண்ணப்பித்து வருகின்றனர். அதன்படி, தினமும் சுமார் 5 ஆயிரம் முதல் அதிகபட்சமாக 20 ஆயிரம் பேர் வரை போட்டி போட்டு விண்ணப்பிக்கிறார்கள். நேற்று மாலை வரையிலான நிலவரப்படி, 2 லட்சத்து 81 ஆயிரத்து 502 விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன. இதில் 2 லட்சத்து 17 ஆயிரத்து 627 பேர் விண்ணப்பக் கட்டணங்களை செலுத்தியிருக்கின்றனர். அவர்களில் 1 லட்சத்து 84 ஆயிரத்து 53 பேர் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்துள்ளனர். விண்ணப்பிப்பதற்கு நாளை (செவ்வாய்க்கிழமை) கடைசி நாள் ஆகும்.

ஆவணங்களை சமர்ப்பிக்க 6–ந்தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது. 5–ந்தேதி ரேண்டம் எண் வெளியிடப்பட உள்ளது. அதனைத்தொடர்ந்து 8–ந்தேதி முதல் 20–ந்தேதி வரை சான்றிதழ் சரிபார்ப்பு நடத்தப்பட்டு, 29–ந்தேதி தரவரிசைப் பட்டியல் வெளியாகிறது. கலந்தாய்வு எப்போது தொடங்கும்? என்பது குறித்த அறிவிப்பு இன்னும் வெளியாகவில்லை.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



# அமெரிக்காவை நோக்கி வந்த ராட்சத விண்கல்: வளிமண்டலத்தில் வெடித்ததால் தப்பிய நகரங்கள்!

வாஷிங்டன், ஜூன். 01–

வடகிழக்கு அமெரிக்காவின் வான்பரப்பில் நுழைந்த பிரமாண்ட விண்கல் பயங்கர சத்தத்துடன் வெடித்து சிதறியது. இதனால், ஏற்பட்ட அதிர்வுகளால், வீடுகள் குலுங்கியதால், நிலநடுக்கம் ஏற்பட்டதோ என அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். அமெரிக்காவின் வடகிழக்கு மாகாணமான மாசசூசெட்ஸ் பகுதியில் நேற்று முன்தினம் மதியம் அரிய வானியல் நிகழ்வு நடந்தது. விண்ணில் இருந்து வந்த ராட்சத விண்கல் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்தபோது ஏற்பட்ட உராய்வு காரணமாக, பகல் நேரத்திலேயே வானில் பிரகாசமான நெருப்பு பந்து தோன்றி மறைந்தது. அதைத் தொடர்ந்து சில நொடிகளில் பீரங்கி வெடிப்பது போன்ற பயங்கர வெடி சத்தம் கேட்டது.

பாஸ்டன், கேப் காட், நியூ ஹாம்ப்ஷயர் மற்றும் ரோட் தீவு உள்ளிட்ட பல பகுதிகளில் பயங்கர சத்தத்துடன், நில அதிர்வு போன்ற உணர்வும் ஏற்பட்டதால், அப்பகுதியில் வசித்த பொது மக்கள் அச்சமடைந்தனர்.

இதுகுறித்து நாசா மற்றும் அமெரிக்க விண்கல் சங்கம் கூறியிருப்பதாவது:

அமெரிக்க வான்பரப்பில் வெடித்தது மூன்று அடி அகலமும், கணிசமான எடையும் கொண்ட ஒரு




விண்வெளிப் பாறையாகும். இது மணிக்கு 1.20 லட்சம் கிலோமீட்டர் என்ற கற்பனைக்கு எட்டாத அதீத வேகத்தில் பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழைந்தது. பூமியின் மேற்பரப்பில் இருந்து 64 கி.மீ உயரத்தில், கடுமையான காற்று உராய்வைத் தாங்க முடியாமல் அது வெடித்து சிதறியது.

இந்த வெடிப்பின்போது வெளியான ஆற்றலானது, 300 டன், 'டி.என்.டி.,' வெடிப்பொருட்களை ஒன்றாக வைத்து வெடிப்பதற்கு சமமானதாக இருந்தது. இவ்வாறு தெரிவித்துள்ளன.

அமெரிக்காவின் அதிநவீன கோஸ் – 19, செயற்கைகோள், பாஸ்டன் நகரின் தெற்கு கடற்கரை பகுதிக்கு மேலே வளிமண்டலத்தில் ஏற்பட்ட ஒரு பிரமாண்ட ஒளிர்தலை தன் கேமராவில் பதிவு செய்ததன் வாயிலாகவே விஞ்ஞானிகள் விண்கல் வெடித்ததை உறுதி செய்தனர்.

விண்கல் பூமியின் மிக உயர்ந்த வளிமண்டலத்திலேயே வெடித்து சிதறிவிட்டதால், தரையில் இருந்த மனிதர்களுக்கோ, கட்டடங்களுக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என உள்ளூர் போலீசாரும், தீயணைப்பு துறையினரும் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளனர். வளிமண்டலத்திலேயே விண்கல்லின் துண்டுகள் பெரும்பாலும் சாம்பலாகியிருக்கும் என்பதால், அவை பூமியில் கிடைப்பது மிக கடினம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஒருவேளை அதன் சிறிய எஞ்சிய பாகங்கள் தப்பியிருந்தாலும் கூட, அது மாசசூசெட்ஸ் கடற்கரையைத் தாண்டி அட்லாண்டிக் பெருங்கடலில் தான் விழுந்திருக்க வேண்டும் என தெரிவித்தனர்.

### பணம், பரிந்துரை அடிப்படையில்

# அரசு வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்படவில்லை: அமைச்சர் நிர்மல்குமார்




சென்னை, ஜூன். 01–

தகுதி அடிப்படையில் அரசு வழக்கறிஞர்கள் வெளிப்படையாக நியமனம் செய்யப்படுகின்றனர் என அமைச்சர் நிர்மல்குமார் பேட்டி அளித்துள்ளார். பணம், பரிந்துரை அடிப்படையில் அரசு வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்படவில்லை என கூறினார்.

# அரசு பள்ளியில் கியூ.ஆர். கோடு மூலம் மாணவர் சேர்க்கை!

திருப்பத்தூர், ஜூன். 01–

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் ரெட்டிதோப்பு பகுதியில் பெத்லகேம் அரசு நகராட்சி நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. இந்த பள்ளியில் 2026 – 2027–ம் கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை பணிகள் எண்ம முறையில் புதுமையாக முன்னெடுக்கப்பட்டு உள்ளது. அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கச் செய்யும் நோக்கிலும், பெற்றோர்களுக்கு எளிய மற்றும் விரைவாக தங்களுடைய பிள்ளைகளை பள்ளியில் சேர்க்கும் நோக்கிலும், பள்ளி ஆசிரியர்கள் இணைந்து




கியூ.ஆர். கோடு அடிப்படையில் ஆன்லைன் சேர்க்கை முறையை அறிமுகப்படுத்தி உள்ளனர்.

பள்ளி வளாகம், முக்கிய தெருக்களின் சந்திப்புகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் கியூ.ஆர். கோடுடன் கூடிய விழிப்புணர்வு பேனர்கள் வைக்கப்பட்டுள்ளன. துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பெற்றோர்கள் தங்களது செல்போன் மூலம் கியூ.ஆர். கோடு மூலம் ஸ்கேன் செய்து, மாணவர்களின் பெயர், வகுப்பு, பெற்றோர் விவரம் உள்ளிட்ட தகவல்களை ஆன்லைனில் பதிவு செய்து உடனடியாக சேர்க்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால் பள்ளிக்கு நேரில் பல முறை வர வேண்டிய அவசியம் இல்லை. தொழிலாளர்கள் மற்றும் தினக்கூலி வேலைக்குச் செல்லும் பெற்றோர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.

# த.வெ.க.வில் தலைதூக்கும் கோஷ்டி பூசல்!

சோழவந்தான், ஜூன் 01–

மதுரை மாவட்டம் சோழவந்தானில் ரசிகர்களாக வந்தவர்கள், புதிதாக நுழைந்தவர்கள் என இருதரப்பாக த.வெ.க., வினரிடையே கோஷ்டி பூசல் உருவாகி உள்ளது. சோழவந்தானில் த.வெ.க.,வுக்கான நிர்வாகிகள் இதுவரை அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படவில்லை.முன்னர் விஜய் ரசிகர் மன்ற நிர்வாகிகளாக இருந்தவர்களே தேர்தலின் போது உழைத்தனர்.

கட்சி வென்று ஆட்சியைப் பிடித்ததும் பலர் தங்களுக்குத் தாங்களே பதவிகளை எடுத்துக் கொண்டு அதிகாரம் செய்ய தொடங்கியுள்ளனர். இதில் அதிருப்தி



அடைந்தவர்கள் கட்சிப் பணிகளில் இருந்து ஒதுங்குகின்றனர்.

**தாவும் அ.தி.மு.க.,வினர்**

இத்தேர்தலில் அ.தி.மு.க., முன்னாள் எம்.எல்.ஏ., கருப்பையா கடைசி கட்டத்தில் த.வெ.க.,வில் சேர்ந்தார். உடனே சீட் பெற்று விசில் சின்னத்தில் வென்றார். இதனால் அவருக்கு நெருக்கமான அ.தி.மு.க., நிர்வாகிகள் சிலர் த.வெ.க.,வுக்கு தாவியுள்ளனர். மேலும் பலர் தாவத் தயாராகி வருகின்றனர். இவ்வாறு தாவியவர்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதாக ஒரு தரப்பினர் கூறுகின்றனர்.

நிர்வாகிகளே அறிவிக்கப்படாத நிலையில் ஒரு தரப்பினரை மட்டும் தன்னுடன் வைத்துக்கொண்டு தங்களை புறக்கணிப்பதாக அவர்கள் வேதனை தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் கூறியதாவது: தேர்தலில் எங்களைத் தவிர யாரும் உழைக்கவில்லை. இருபது ஆண்டுகளாக விஜய் மக்கள் இயக்கத்தில் நாங்கள் உழைக்கிறோம். இப்போது விஜய் முதல்வரானதும் ஆளாளுக்கு பதவியை கொடுத்துக் கொண்டு அராஜகம் செய்கின்றனர். எம்.எல்.ஏ., கருப்பையா அவர் பங்கேற்கும் விழாக்கள் குறித்து எங்களுக்கு தெரிவிக்காமல் புறக்கணிக்கிறார்.

ஒரு தரப்பினருக்கு தெரிவித்து அவர்களை மட்டும் அழைத்துச் செல்கிறார். எனவே அவரை நாங்களும் புறக்கணிக்கிறோம். உழைத்தவர்களுக்கே கட்சிப் பதவி வழங்கப்படும் என தலைமை கூறியுள்ளதால் அமைதியாக இருக்கிறோம் என்றனர்.

# ஸ்ரீ முருகன் வைகாசி விசாக விழாக் குழுவினர் நடத்திய 54 ஆம் ஆண்டு வைகாசி விசாக உத்சவ விழா!

மதுரை, ஜூன். 01–

54 ஆவது ஆண்டு வைகாசி விசாக உத்ஸவ விழா 30.05.2026 அதிகாலை முதல் இரவு வரை மதுரை பைபாஸ் ரோடு சிருங்கேரி மடம் வளாகத்தில் உள்ள அரங்கில் நடைபெற்றது. மாலை நடைபெற்ற திருப்புகழ் இசை வழிபாடு, காவடி சிந்து மற்றும் இன்னிசை பாடல்கள் திண்டுக்கல் குமார் குழுவினர், பெங்களூரு குமாரி தபஸ்யா வைத்தியநாதன் குழுவினரின் வள்ளி திருமணம் சங்கீத உபன்யாசம். ஷண்முகார்ச்சனை சிருங்கேரி சங்கர மடம் ஸ்கந்த சஷ்டி குழுவினரின் ஸ்கந்த சஷ்டி கவசம் மற்றும் ஸுப்ரமண்ய புஜங்கம் பாராயணம். நிருத்தியாலயா நாட்டிய பள்ளி நாட்டிய நண்மணி செல்வி கணேஷ் பள்ளியினரின் பரத நாட்டியம் சிறப்பாக நடைபெற்றது. கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம் "பக்தி வெள்ளம் 'என்ற தலைப்பில் சிறப்புரை




ஆற்றுகையில் உள்ளத்தால், சேவையால், பண்பினால், வீரத்தால், பிறரை மதிக்கும் வாழ்வியலால் நாம் வளரும் தலைமுறைக்கு வழிகாட்ட வேண்டும், அழகன் முருகனுக்கு பிறந்த நாள் கொண்டாடும் பக்தி வெள்ளம் இது. இந்த தேசத்தின் அடையாளம் ஆன்மிகம். வளரும் தலைமுறைக்கு நமது வேதங்களின் சிறப்பினை உணர்த்தும் உன்னதப் பணியை இந்த வைகாசி விசாக விழாக் குழுவினர் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாகச் செய்து வருகின்றனர். இது உலகம் முழுவதும் உள்ள மனிதகுல மேன்மைக்காக மாநகர் மதுரையில் வேத விற்பன்னர்கள் பங்கேற்புடன் நடத்தப்படும் வேள்வி. பூஜ்ய ஸ்ரீ ராமானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் உள்ளிட்ட பெருமக்கள் ஆசி வழங்கினர். பரதம், பாட்டு, ருத்ர ஜபம், லஷார்ச்சனை, திருப்புகழ் இசை, தெய்வத் தீந்தமிழ் இன்னிசை, குழு பஜன், டோலோத்ஸவம், ஸ்ரீ ஆஞ்சநேய உத்சவம் என தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சி மற்றும் அன்னதானம் நடைபெற்றது பாராட்டுக்குரியது என்றார். விழாக் குழு செயலாளர் ஆர். சத்தியமூர்த்தி, தலைவர் ஆர். விஸ்வநாதன், துணைத் தலைவர் ஆர். கோபாலகிருஷ்ணன் என்ற ஸ்ரீதர், பொருளாளர் ஆர். சுப்பிரமணியன், தாம்பிராஸ் மாநிலத் துணைத் தலைவர், குருதிக் கொடையாளர் இல. அமுதன், இல.புவனேஷ், அம்மா கேட்டரிங் உரிமையாளர் கிருஷ்ணய்யர்,, எஸ் பி ஐ நாராயணன், அம்பி, டாக்டர் பி. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் டி.ராமசுப்பிரமணியன், டிவிஎஸ் மேனாள் பி ஆர் ஓ. வீரசுந்தரம், ஜெ.பாஸ்கர், கிருஷ்ணன், கண்ணன் பாகவதர், பொறியாளர் கண்ணன், ஏ வி பிரபாகரன் என ஏராளமானோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். அனைவருக்கும் உணவு ஏற்பாடு, விழாக் குழுவினர் மிகச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

# திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவில் அதிகாரிகளை கூண்டோடு மாற்ற முடிவு!

தூத்துக்குடி, ஜூன். 01–

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில், நீண்ட நாட்களாக பணிபுரியும் அதிகாரிகளை மாற்ற, முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.



தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. பொது தரிசனம், 100 ரூபாய் கட்டண தரிசனம் மற்றும் முதியோருக்கான தரிசனம் என, மூன்று வரிசைகளில் பக்தர்கள், கோவிலுக்குள் அனுமதிக்கப்படுவது வழக்கம். ஆனால், அர்ச்சகர்கள், அதிகாரிகள், பாதுகாப்பு பணியாளர்கள் கூட்டாக சேர்ந்து, பக்தர்களிடம் பணம் பெற்று, தரிசனத்திற்கு குறுக்குவழியில் அனுப்புவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் எழுந்தன.

ஆட்சி மாற்றத்திற்கு பின், ஹிந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் ரமேஷ், மே 29ல் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில், சாதாரண உடையில் 'மாஸ்க்' அணிந்தபடி திடீரென ஆய்வு செய்தார்.

அப்போது, தரிசனத்திற்கு பணம் வாங்கிய அர்ச்சகர் அய்யப்பன், அவருக்கு உடந்தையாக இருந்த பாதுகாப்பு பணியாளர்கள் கருப்பசாமி, தோப்பு ஆகியோர் மீது, நடவடிக்கை எடுக்க அவர் உத்தரவிட்டார். தொடர்ந்து, கோவிலில் பூஜை செய்ய அர்ச்சகர் அய்யப்பனுக்கு தடை விதிக்கப்பட்டது. பாதுகாப்பு பணியாளர்கள் இருவரும் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த விவகாரத்தில், அமைச்சர் விதிமுறையை மீறி செயல்பட்டதாக, தி.மு.க., முன்னாள் அமைச்சரான எம்.எல்.ஏ., அனிதா ராதாகிருஷ்ணன் கண்டன அறிக்கை வெளியிட்டிருந்தார்.

அதற்கு சமூக வலைதளத்தில் பதில் அளித்திருந்த அமைச்சர் ரமேஷ், 'மக்களை சுரண்டி பிழைப்பது யாராக இருந்தாலும் ஜாதி, மத பாகுபாடின்றி நடவடிக்கை எடுக்கப்படும். கோவிலில், இன்னும் பல முறைகேடுகள் நடந்து வருவதை விரைவில் வெளியே கொண்டு வருவேன்' என, தெரிவித்து இருந்தார். இதுகுறித்து, கோவில் அதிகாரிகள் சிலர் கூறியதாவது: அர்ச்சகர்கள், பக்தர்களிடம் பணம் பெற்று, குறுக்குவழியில் தரிசனத்திற்கு அழைத்து செல்லும் செயல், பல ஆண்டுகளாக நடந்து வருகிறது.

அர்ச்சகர்களுடன் கூட்டு சேர்ந்து அவர்களுக்கு கிடைக்கும் தொகையை, உயர் அதிகாரிகளும் பங்கு போடும் நிலை உள்ளது. 100 ரூபாய் கட்டணத்தில் நடந்த முறைகேடு போன்று, கோவிலுக்கு சொந்தமான கடைகளில் வாடகை வசூலிப்பது, சொத்துக்களுக்கு வாடகை நிர்ணயம் செய்வது, ஆக்கிரமிப்புகளை கண்டுகொள்ளாமல் இருப்பது என உயர் அதிகாரிகள் சிலர், வருவாய் இழப்பை ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகின்றனர். உள்ளூர் அமைச்சராக இருந்த அனிதா ராதாகிருஷ்ணனின் ஆதரவோடு, இவ்வளவு நாட்களும் அவர்கள் செயல்பட்டு வந்தனர்.

இதுதொடர்பான முழு விபரத்தையும் ஆய்வின்போது, அமைச்சர் ரமேஷ் சேகரித்து உள்ளார். விதிமுறை மீறலுக்கு உடந்தையாக இருந்தவர்களுக்கு, துணையாக இருந்த அதிகாரிகள், கூண்டோடு இன்னும் ஓரிரு நாட்களில் இடமாற்றம் செய்யப்பட உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சுப்ரீம் கோர்ட்டிற்கு புதிதாக 5 நீதிபதிகள் நியமனம்!



புதுடெல்லி, ஜூன். 01–

சுப்ரீம் கோர்ட்டிற்கு ஐந்து புதிய நீதிபதிகளை நியமித்து மத்திய சட்ட அமைச்சகம் இன்று அறிவிப்பு வெளியிட்டுள்ளது. நீதிபதிகள் வெங்கிட சுப்பிரமணிய மோகனா, மும்பை ஐகோர்ட் தலைமை நீதிபதி ஸ்ரீ சந்திரசேகர், பஞ்சாப் மற்றும் அரியானா ஐகோர்ட் தலைமை நீதிபதி ஷீல் நாகு, மத்திய பிரதேச ஐகோர்ட் தலைமை நீதிபதி சஞ்சீவ் சச்தேவா மற்றும் ஜம்மு–காஷ்மீர் ஐகோர்ட் நீதிபதி அருண் பல்லி ஆகியோர் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை மத்திய சட்ட அமைச்சகம் திங்கள்கிழமை காலை வெளியிட்டது. புதிய நீதிபதிகள் நியமனம் தொடர்பாக கொலிஜியம், மத்திய அரசுக்கு பரிந்துரை வைத்து இருந்த நிலையில், அதனை ஏற்றுக்கொண்டு சட்ட அமைச்சகம் இந்த அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

# மலேசியாவில் 16 வயதிற்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தத் தடை!

மலேசியா, ஜூன் 01–

மலேசியாவில் இன்று முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக வலைதளங்களைப் பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகளின் ஆன்லைன் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, இந்த முயற்சியை மலேசியா அரசு முன்னெடுத்துள்ளது. அதன்படி, சமூக வலைதளங்களைப் பயன்படுத்த கட்டாயமாக வயது சரிபார்ப்பு முறைகளைச் செயல்படுத்த வேண்டும் மற்றும் 16 வயதிற்குட்பட்டோர் கணக்குத் தொடங்குவதைத் தடுக்க வேண்டும் ஆகிய விதிமுறைகள் கொண்டு




வரப்பட்டுள்ளன.அதாவது, பேஸ்புக், இன்ஸ்டாகிராம், டிக்டாக் மற்றும் யூடியூப் போன்ற 8 மில்லியனுக்கும் அதிகமான பயனர்களைக் கொண்ட தளங்களுக்கு இந்த விதி பொருந்தும். விதிகளைப் பின்பற்றத் தவறும் நிறுவனங்களுக்கு ரூ.24 கோடி வரையில் அபராதம் விதிக்கப்படலாம்.

ஆஸ்திரேலியா, பிரேசில் மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளும் ஏற்கனவே இதுபோன்ற கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தியுள்ளன. பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகள், 16 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர், சமூக வலைதளங்களைப் பயன்படுத்த தடை விதிப்பது குறித்து பரிசீலனை செய்து வருகின்றன. இது குறித்து மெட்டா நிறுவனத்தின் கொள்கை இயக்குனர் கிளாரா கோ கூறுகையிர்ல, 'இத்தகைய முழுமையான தடை பதின்ம வயதினரை முறைப்படுத்தப்படாத இணையப் பக்க ங்களுக்குத் தள்ளி விடும்,' என்று எச்சரித்துள்ளார்.

## 51–வது திருமண நாள்



சிவாஜி மன்றம் முருகவிலாஸ் நாகராஜன் தம்பதியினருக்கு 51–வது திருமண நாள் நல்வாழ்த்துக்கள்..!

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020